கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் அக்டோபர் மாதம் 22ம் தேதி புதன்கிழமை
இடைநிலை மனு எண்.1/2019
இன்
அசல் வழக்கு எண்.224/2019
-----

அழகன் ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

கணேசன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 10.10.2025ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.தினேஷ்பாபு அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.வள்ளிநாயகம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எழுத்துமூலமான வாதுரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

தாவா 1 வது இலக்கச் சொத்துக்கு தாவா 2ம் இலக்கச் சொத்தின் வழியாக வாதி சென்று வரும் வசதியுரிமையை (essementory rights) இந்த நிர் எதிர்மனுதாரர்/பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ எவ்விதத்திலும் தடுக்கக் கூடாது என மேற்படியார் மீது தற்காலிக தடை உத்தரவுப் பரிகாரம் கோரியும், அதே காரணத்திற்காக ஒரு இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் ஒருதலைப்பட்சமாக இந்த மனு முடியும் வரை வாதியின் செலவுத் தொகையுடன் வழங்கக் கோரியும் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதியால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை :-**

இந்த மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

1.1) அசல் வழக்கானது தாவா 1 வது இலக்கச் சொத்துக்கு தாவா 2ம் இலக்கச் சொத்தின் வழியாக வாதி சென்று வரும் வசதியுரிமையை (essementory rights) இந்த நிர் எதிர்மனுதாரர்/பிரதிவாதியோ, அவரது

வகையாட்களோ எவ்விதத்திலும் தடுக்கக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதே காரணத்திற்காக ஒரு இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் ஒருதலைபட்சமாக இம்மனு முடியும் வரை வழங்ககோரியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்று கூறி ஆட்சேபணை தெரிவித்துள்ளார்.

**<u>3. தீர்வு</u>:–**

ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தப்பட வில்லை.

3.1) மேலும், கட்டளை 39 விதி 1, 2 CPC கீழ் மனுதாரர்கள் நிவாரணம் பெற வேண்டும் என்றால்,

(i) மனுதாரர்களின் வழக்கிற்கு முதற்தோற்ற வழக்கு இருக்கவேண்டும்.

(ii) மேற்படி நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் மனுதாரர்களுக்கு பணத்தால் ஈடு செய்ய முடியாத இழப்பும் துன்பமும் ஏற்படும் என்று நிருபணம் செய்யவேண்டியது அவசியமானதாகும். ஆனால், இம்மனுவில் மேற்படியான நிபந்தனையை நிரூபணம் செய்யும் விதமாக மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியமோ முன்னிலைப்படுத்தவில்லை.

3.2) மேலும், மேற்படி அசல் வழக்கின் பரிகாரமானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமாக உள்ள நிலையில், மேற்படி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த இடைக்கால மனுவினை அனுமதிக்காததால் மனுதாரர்/வாதிக்கு பணத்தால் ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்று மனுதாரர்/வாதி தரப்பால் நிரூபணம் செய்யாததாலும், அசல் வழக்கில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும், இம்மனுவில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும் ஒன்றாக இருப்பதாலும், வழக்குச்சொத்தை பொறுத்து மனுதாரர்/வாதிக்கு தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதை முழு விசாரணைக்கு பின்பு தான் தீர்வு காண இயலும் என்பதால், மேற்படி காரணங்களை கருத்தில் கொண்டு இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதி கோரியுள்ள இடைக்கால தடையுறுத்தரவு கட்டளை பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 22.10.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.22 11:45:13 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

<u>இணைப்பு</u>:–

<u>மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:–

– இல்லை –

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.22 11:45:22 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.01/2019
அசல் வழக்கு எண்.224/2019
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 22.10.2025